# மெட்ரோ ரயில் நிலையங்களில் பிப்.2-இல் ஓவியப்போட்டி

சென்னை, ஜன. 25: சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளுக்கான ஓவியப்போட்டி பிப்ரவரி 2-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், சென்னை கலைப்பள்ளி ஆகியன சார்பில், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான ஓவியப் போட்டி பிப்ரவரி 2-ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை நடைபெறுகிறது. சென்ட்ரல், எழும்பூர், ஷெனாய் நகர், அண்ணாநகர் கோபுரம், கோயம்பேடு, வடபழனி, அசோக் நகர், பரங்கிமலை, விமான நிலையம் மெட்ரோ, சைதாப்பேட்டை, தேனாம்பேட்டை, ஆயிரம் விளக்கு, அரசினர் தோட்டம், மண்ணடி, வண்ணாரப்பேட்டை ஆகிய 15 மெட்ரோ ரயில் நிலையங்களில் இந்தப் போட்டி நடைபெறவுள்ளது.

இது குறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறியது:

'மெட்ரோ ரயில்' அல்லது 'மெட்ரோ நிலையம்' அல்லது 'மெய்நிகர் உண்மை' என்னும் தலைப்புகளில் போட்டிகள் நடத்தப்படும். ஒவ்வொரு மெட்ரோ நிலையத்திலும் 20 சிறந்த ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றுக்கு பதக்கங்களும், சான்றிதழ்களும் அன்று மதியம் 1 மணிக்கு வழங்கப்படும்.

'சிறந்த கலைஞர் விருது 2020' தேர்வு செய்ய, ஒவ்வொரு மெட்ரோ நிலையத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 ஓவியங்கள், மெட்ரோ பயணிகள் வாக்களிப்பதற்காக 15 மெட்ரோ நிலையங்களிலும் பிப்ரவரி 3-ஆம் தேதி முதல் வைக்கப்படும். பிப்ரவரி 9-ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் நடத்தப்படும் விழாவில் வெற்றியாளர்களுக்கு ரொக்கப் பரிசும், சான்றிதழும் வழங்கப்படும்.

ஓவியப்போட்டியில் பங்கேற்பவர்களுக்கு சார்ட் பேப்பர் (1ற4 அளவு) சென்னை கலைப்பள்ளியால் வழங்கப்படும்.

ஓவியப்போட்டிக்கு தேவையான கலைப் பொருட்களை போட்டியில் பங்கேற்கும் மாணவர்கள் கொண்டு வரவேண்டும். போட்டியில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள் தங்கள் பெயர்களை www.chennaiartschool.com Dன்னும் இணையதளத்தில் பதிவு செய்யலாம் அல்லது

ஜனவரி 29-ஆம் தேதி முதல் 7448822099 என்ற கட்செவி( வாட்ஸ் அப்) எண் மூலம் பெயர், முகவரி மற்றும் தொடர்பு எண் ஆகியவற்றை பதிவு செய்யலாம்.

5 பிரிவுகள்: குழு 'ஏ' பிரிவில் 1 முதல் 3-ஆம் வகுப்பு மாணவ-மாணவிகளுக்கும், குழு 'பி' பிரிவில் 4 முதல் 6-ஆம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கும், குழு 'சி' பிரிவில் 7 முதல் 9-ஆம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கும், குழு 'டி' (10 முதல் 12-ஆம் வகுப்பு மாணவிகளுக்கும், குழு 'இ' பிரிவில் கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் என்று 5 பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்படுகின்றன என்றார் அவர்.